# என்எல்சி இந்தியா நிறுவனம், நெய்வேலி

( முன்னாள் நெய்வேலி பழுப்பு நிலக்கரி நிறுவனம்)

( 'நவரத்னா' – இந்திய அரசு நிறுவனம் )

CREATING WEALTH FOR WELLBEING

# விடுதலை நாள் விழா - 2018

## தலைவர் மற்றும் மேலாண் இயக்குநரின் உரை

எனது அன்பிற்குரிய சக இயக்குநர்களே, கண்காணிப்புத்துறை தலைமை அதிகாரி அவர்களே, உயர் அதிகாரிகளே, பணியாளர்கள் மற்றும் அவர்தம் குடும்பத்தினரே, ஒப்பந்தத் தொழிலாளர்கள், இண்ட்கோசர்வ், மற்றும் ஹவுசிகோஸ் சங்கங்களின் உறுப்பினர்களே, அவர்தம் குடும்பத்தினரே, அங்கீகரிக்கப்பட்ட தொழிற்சங்கங்களான CITU மற்றும் என்எல்சி தொழிலாளர் முன்னேற்ற சங்கம் ஆகியவற்றின் பிரதிநிதிகளே, பொறியாளர்கள், மேற்பார்வையாளர்கள் மற்றும் அதிகாரிகள் சார்ந்துள்ள சங்கங்களான பட்டதாரிப் பொறியாளர், பொறியாளர், தேசிய பட்டதாரிப் பொறியாளர் மற்றும் அதிகாரிகள் சங்கங்களின் பிரதிநிதிகளே, SC/ST பணியாளர் நலச் சங்கம், ST பணியாளர் நலச் சங்கம், OBC பணியாளர் நலச் சங்கம் ஆகியவற்றின் பிரதிநிதிகளே, மத்திய தொழிலகப் பாதுகாப்புப்படையின் அதிகாரிகளே, பல்வேறு நிலைகளில் பணிபுரியும் ஊழியர்களே, பள்ளிகள் மற்றும் கல்லூரியின் முதல்வர்களே, ஆசிரியப் பெருமக்களே, கல்வித்துறையின் ஊழியர்களே, எனதருமை பள்ளி மற்றும் கல்லூரி மாணவமணிகளே, பத்திரிகை மற்றும் தொலைக்காட்சிகளின் செய்தியாளர்களே, மரியாதைக்குரிய விருந்தினர்களே, மூத்த குடிமக்களே, பெரியோர்களே, தாய்மார்களே, எனதருமைக் குழந்தை செல்வங்களே,

**உங்கள் அனைவருக்கும், முதற்கண் எனது வணக்கத்தைத் தெரிவித்துக்கொள்வதுடன், சுதந்திரதின விழா வாழ்த்துகளையும் தெரிவித்துக்கொள்கிறேன்**

நமது நாட்டின் 72வது விடுதலை நாள் விழாவினை, இந்த மகிழ்ச்சி மிகு தருணத்தில், உங்கள் அனைவருடனும் இணைந்து கொண்டாடுவது, எனக்கு மட்டற்ற மகிழ்ச்சியை அளிக்கிறது. பாரம்பரியமிக்க நமது நிறுவனத்தின் தலைவர் மற்றும் மேலாண் இயக்குநர் பதவியை, கூடுதல் பொறுப்பாக ஏற்ற பின்னர், என்எல்சி இந்தியா குடும்ப உறுப்பினர்கள் மற்றும் பொதுமக்களிடையே நான் ஆற்றும் முதல் உரை இது. இந்த மகிழ்ச்சிமிக்கத் தருணத்தில், 62 ஆண்டுகள் நிறைவுசெய்துள்ள நமது நிறுவனத்தின், முன்னாள் தலைவர்கள், இயக்குநர்கள் மற்றும் ஊழியர்கள், நிறுவனத்தின் வளர்ச்சிக்காக மேற்கொண்ட பயன்மிக்கப் பங்களிப்பினை நன்றியுடன் நினைவுகூர்கிறேன். அவர்களது ஓய்வற்ற உழைப்பு மற்றும் தொடர் முயற்சிகளால்தான் நமது நிறுவனம், இன்று ஒரு சிறப்புமிகு நிலையை அடைந்துள்ளது.

நமது தேசியக் கொடி ஏற்றப்படும் போதும், அது வானில் பட்டொளி வீசி பறப்பதைப் பார்க்கும் போதும், ஒவ்வொரு இந்தியனின் இதயமும் மகிழ்ச்சியால் நிரம்புகிறது. மேலும், நமது மூவர்ணக்கொடியானது நம்மை பெருமையடையச் செய்கிறது. நமது நாட்டின் விடுதலைப் போராட்டக்களத்தில், தேசத்தந்தை மகாத்மா காந்தியடிகளும், பல்வேறு தேசியத் தலைவர்களும், சுதந்திரப் போராட்ட வீரர்களும் சந்தித்த இன்னல்களையும் மேற்கொண்ட தியாகங்களையும் இந்த நன்நாளில் நாம் நினைவுகூர்வோம்.

மத்திய அரசு செயல்படுத்தி வரும் 'இந்தியாவில் உருவாக்குவோம்' என்ற புதிய முயற்சி, நவீன தொழில்நுட்பங்களை அறிமுகப்படுத்துவதிலும், உற்பத்தித்துறையிலும், இந்தியாவை மிகச்சிறந்த நாடாக உருவாக்கியுள்ளது. 'தூய்மை இந்தியா திட்டம்' என்ற முயற்சியானது, நமது தேசத்தை தூய்மையான ஒரு தேசமாகவும், திறந்தவெளியில் மலம் கழிப்பதை முற்றிலும் தவிர்க்கும் தேசமாகவும் மாற்றிவருகிறது. 'திறன்மிகு இந்தியா' திட்டமானது, தொழிலாளர்கள், இளைஞர் மற்றும் இளம் பெண்களுக்குத் தேவையான திறனையும், அறிவையும் வழங்கி, நமது பொருளாதார மேம்பாட்டிற்கு சிறப்பான பங்களிப்பினை வழங்க வழிவகுத்துள்ளது. 'ஸ்டார்ட்அப் இந்தியா' என்றத் திட்டம், வேலை தேடும் இந்திய இளைஞர்களை வேலை வழங்குபவர்களாக உருவாக்கி வருகிறது. 'அனைவருக்கும் தடங்கல் இல்லா மின்சக்தி' என்றத் திட்டத்தின் மூலம், 2019ம் ஆண்டிற்குள், நாட்டின் அனைத்துக் குடிமக்களுக்கும் 24 மணிநேரமும் தடையற்ற மின்சக்தி வழங்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுவருகிறது.

தேசத்தின் வளர்ச்சியை விரைவுபடுத்தும் வகையில், நமது நிறுவனம், தான் ஈடுபட்டுவரும் சுரங்கம் மற்றும் மின்உற்பத்தித்துறைகளில், ஒரு தலைசிறந்த, சமுதாயப் பொறுப்புணர்வுமிக்க நிறுவனமாகத் திகழ வேண்டும் என்ற நோக்கத்துடன், நீண்டகாலத் திட்டங்களை வகுத்துள்ளது. அந்தவகையில், 2025ம் ஆண்டிற்குள் நமது

- நெய்வேலி கேந்திரிய வித்யாலயா மாணவி செல்வி V. ஜோதி, கேந்திரிய வித்யாலயா பள்ளிகளுக்கிடையே புதுடில்லியில் நடைபெற்ற தேசிய நீச்சல் போட்டியில் ஒரு தங்கம், 3 வெள்ளி மற்றும் ஒரு வெண்கலப்பதக்கங்களை வென்றுள்ளார். அப்பள்ளி மாணவன் செல்வன் ஜோஷ்வா ப்ராங்க், அதேப் போட்டியில், ஒரு வெண்கலப் பதக்கம் வென்றுள்ளார்.
- நெய்வேலி கேந்திரிய வித்யாலயா மாணவி செல்வி V. ரஞ்சனி, பரதநாட்டியப் பிரிவில், மத்திய கலாச்சார அமைச்சகத்தின்கீழ் செயல்பட்டுவரும் 'கலாச்சார வளம் மற்றும் பயிற்சி அமைப்பு' வழங்கும் உதவித் தொகை பெற தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார் என்பதை உங்களிடம் மகிழ்ச்சியுடன் அறிவிப்பதுடன், இம்மாணவமணிகளுக்கு எனது நெஞ்சார்ந்த வாழ்த்துகளையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

மேலும், இன்றையக் கொண்டாட்டங்களின் நிறைவில் நடைபெறும் கலைநிகழ்ச்சிகளில் பங்கேற்கவிருக்கும் மாணவமணிகளுக்கும் எனது வாழ்த்துகளைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

ஹைதராபாத் மற்றும் புதுடில்லியில் நடைபெற்ற மூத்தோருக்கான தேசிய தடகளப்போட்டியில் 8 தங்கம், 4 வெள்ளி மற்றும் 2 வெண்கலப்பதக்கங்களை வென்ற நமது நிறுவன அணியின் திரு. M. முரளிதரன், திரு. Z.முகமது ஹுசைன், திருமதி. ஜெம்மா ஜோசப், திருமதி. S. தீபா, திருமதி. லாலி ஜோசப், திருமதி. டெசி ஜோசப் மற்றும் திருமதி. V.J. சாந்திமோள் ஆகியோருக்கு எனது பாராட்டுகளைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

நெய்வேலி, தூத்துக்குடி மற்றும் பர்சிங்சர் நகரங்களில் உள்ள நமது குடியிருப்புப் பகுதிகளை தூய்மைப்படுத்தும் பணிகளில், அனைவரும் ஒருங்கிணைந்து செய்த வியத்தகு செயல்களுக்காக உங்கள் அனைவருக்கும் எனது பாராட்டுகளைத் தெரிவிப்பதில் பெருமகிழ்ச்சியடைகிறேன்.

நமது நிறுவனம், தனது செயல்பாடுகளை நாட்டின் பல்வேறு பகுதிகளில் விரிவுபடுத்தியுள்ளதன் மூலம், வளர்ச்சிப் பாதையில் பயணித்துவருகிறது என்பதை உங்கள் அனைவரிடமும் இந்த நல்ல நேரத்தில் நினைவூட்ட விரும்புகிறேன். வளர்ச்சிப் பாதையில் செல்லும், அனைவருக்கும் சவால்கள் என்பது தவிர்க்க முடியாதது. அதுபோன்று, நாமும் பல்வேறு சவால்களை சந்திக்கும் நிலை ஏற்படலாம். ஆனால், நமது நிறுவனத்தின் வளர்ச்சிக்காக, ஏற்கனவே வலிமையான அடித்தளம் அமைக்கப்பட்டுள்ளதுடன், அர்ப்பணிப்பு உணர்வுடன் பணியாற்றும் அனுபவமும், திறனும் மிக்க அதிகாரிகளும், தொழிலாளர்களும், நிறுவனத்தின் வளர்ச்சிக்காக அயராது பாடுபட்டுவருகின்றனர். அவர்கள் நமது நிறுவனத்தை மேலும் மிக உயர்ந்த இடத்திற்கு எடுத்துச்செல்வார்கள் என்பதில் எனக்கு எவ்வித ஐயமுமில்லை.

நமது வெற்றிப்பயணத்தை, நாம் துணிவுடனும், உறுதியுடனும், தளராத நம்பிக்கையுடனும், போட்டியுணர்வுடனும் தொடர்வதுடன், நாம் சந்திக்கவிருக்கும் அனைத்து இடர்பாடுகளையும் வலிமையுடன் எதிர்கொண்டு, நமது நிறுவனத்தை மேலும் பல உச்சங்களுக்கு எடுத்துச்செல்லும் வகையில் ஆர்வத்துடனும், விவேகத்துடனும் உழைக்க வேண்டும்

"இல்லை என எப்போதும் கூறக்கூடாது, என்னால் முடியாது என ஒருபோதும் சொல்லக்கூடாது. உங்கள் திறனுக்கு எல்லையே இல்லை. அனைத்து ஆற்றலும் உங்களிடமே உள்ளது. உங்களால் எதையும் செய்யமுடியும்'' என்ற சுவாமி விவேகானந்தரின் பொன்மொழிகளை இந்நேரத்தில் உங்களிடம் எடுத்துக்கூற விரும்புகிறேன்.

ஆசைப்படுவதால் மட்டும் எதுவும் மாறுவதில்லை
அடைய முடிவெடுப்பதால் சிலவற்றை மாற்றமுடியும்
ஆனால், உறுதியான தீர்மானத்தால் அனைத்தையும் மாற்றமுடியும்.

தெய்வப்புலவர் திருவள்ளுவர், தனது ஊக்கம் உடைமை அதிகாரத்தில் வழங்கியுள்ள 594வது குறளுடன் எனது உரையை நிறைவு செய்ய விரும்புகிறேன்.

ஆக்கம் அதர்வினாய்ச் செல்லும் அசைவிலா
ஊக்க முடையா னுழை

அதாவது, மனஉறுதியும், விடாமுயற்சியும் கொண்டவரை, அதிர்ஷ்டமும், முன்னேற்றமும் இணைபிரியாத தோழர்களைப் போன்று பின்தொடரும்.

நமது நிறுவன ஊழியர்கள் அனைவரும், உற்சாகத்துடனும், ஊக்கத்துடனும், உறுதியுடனும், திறமையுடனும், அர்ப்பணிப்பு உணர்வுடனும் தங்கள் கடின உழைப்பினை ஒற்றுமையுடன் வழங்கி, நாம் அடையத் திட்டமிட்டுள்ள மகாரத்னா நிலையை விரைவில் எட்டி, நம் கனவினை நனவாக்கிட உங்கள் அனைவருக்கும் எனது வாழ்த்துகளைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

நன்றி!     வணக்கம்!     ஜெய்ஹிந்த்!

நிறுவனம் ஆண்டிற்கு 9 கோடியே 31 லட்சத்து 50 ஆயிரம் டன் பழுப்பு நிலக்கரி மற்றும் நிலக்கரியை உற்பத்தி செய்யும் சுரங்கங்கள் மற்றும் மணிக்கு 2 கோடியே 10 லட்சத்து 11 ஆயிரம் யூனிட் (21,011 மெகாவாட்) உற்பத்தி செய்யும் பழுப்பு நிலக்கரி, நிலக்கரி அனல்மின் நிலையங்களையும், காற்றாலை மற்றும் சூரியஒளி மின்சக்தி திட்டங்களையும் செயல்படுத்த ஒரு மிகப்பெரும் திட்டத்தை வகுத்து, அதனை நடைமுறைப்படுத்தி வருகிறோம்.

இம்மகிழ்ச்சி மிக்கத் தருணத்தில், 2017–18ம் ஆண்டில், நமது நிறுவனத்தின் உற்பத்திச் செயல்பாடுகளை உங்களிடம் பகிர்ந்துகொள்ள விழைகிறேன்.

- ❖ நமது நிறுவனத்தில் ஏற்கனவே செயல்பாட்டில் இருந்துவந்த 55 மெகாவாட் பசுமை மின் நிலையங்களுடன், கடந்த நிதி ஆண்டில், 236 மெகாவாட் திறன்கொண்ட, சூரியஒளி மற்றும் காற்றாலை மின் நிலையங்களில் கூடுதலாக உற்பத்தி தொடங்கப்பட்டுள்ளது.
- ❖ கடந்த ஆண்டில், அனைத்து சுரங்கங்களிலிருந்தும் வெட்டி எடுக்கப்பட்ட மொத்த பழுப்பு நிலக்கரி அளவு 251.53 லட்சம் டன் ஆகும். அதுபோன்று, அனைத்து மின்நிலையங்களிலிருந்தும் உற்பத்தி செய்யப்பட்ட மொத்த மின்சக்தியின் அளவு 2074.084 கோடி யூனிட் ஆகும்.

நாம், மின்வாரியங்களுக்கு ஒதுக்கீடு செய்யும் மின்சக்தியை அவை பெறாத நிலையில், நமது நிறுவனத்தின் வருவாயை அதிகரிக்கும் வகையில், ஒரு புதிய வர்த்தக முயற்சியாக, அந்த உபரி மின்சக்தியை 2016ம் ஆண்டுமுதல், என்டிபிசி வியாபார் நிகாம் என்ற மத்திய அரசு நிறுவனத்தின் மூலம் விற்பனை செய்து வந்தோம். அந்த வகையில், 2016–17ம் ஆண்டில் ரூ. 134 கோடியையும், 2017–18ம் ஆண்டில் ரூ. 294 கோடியையும், உபரி மின்சக்தியை விற்பனை செய்து கூடுதல் வருவாயாகப் பெற்றோம்.

இந்நிலையில், நமது நிறுவனத்திற்கு, மின்சக்தியை நேரடியாக விற்பனை செய்வதற்கான அதிகாரப்பூர்வ உரிமத்தை மத்திய மின்சக்தி ஒழுங்கு முறை ஆணையம் வழங்கியுள்ளது. இதன்மூலம் நமது உபரி மின்சக்தியை, சந்தையில் நேரடியாக விற்பனை செய்யவும், மின்சக்தி உற்பத்தி செய்யும் அமைப்புகளிடமிருந்து கொள்முதல் செய்து, தேவையான நிறுவனங்களுக்கு நேரடியாக விற்பனை செய்யவும் நாம் உரிமம் பெற்றுள்ளோம். மின்சக்தி விற்பனை விலையை, மாற்றியமைத்தபோது, ஆற்றல் பகுதிக்கான விலை குறைக்கப்பட்டதால், தற்போது நமது மின்நிலையங்களின் உற்பத்தித் திறன் மேம்பட்டுள்ளது.

2017–18ம் ஆண்டில், நமது நிறுவனம் பதிவுசெய்த மொத்த விற்பனை அளவு ரூ. 8496.20 கோடியாகவும், வரிக்கு முந்தைய லாபம் (PBT) மற்றும் வரிக்குப் பிந்தைய லாபம் (PAT) முறையே ரூ. 2689.70 கோடி மற்றும் ரூ. 1848.78 கோடியாகவும் இருந்தது. 2017–18ம் ஆண்டில் நமது நிறுவனத்தின் EBITDA எனப்படும் வட்டி, வரி, தேய்மானம் மற்றும் கடனை திரும்ப அடைத்தல் ஆகியவற்றிற்கு முந்தைய லாபம் ரூ.3706.79 கோடியாக இருந்தது. இது 2016–17ம் ஆண்டின் EBITDA தொகையான ரூ. 3006.13 கோடியை விட 23.30 சதவிகிதம் அதிகம் என்பது குறிப்பிடத்தக்கது.

நமது எதிர்காலத்திட்டங்களை அமல்படுத்துவதைப் பொறுத்தவரையில், கீழ்க்கண்ட திட்டங்களில் பணிகள் நடைபெற்று வருகின்றன.

1. நெய்வேலியில் அமைக்கப்பட்டுவரும் 2x500 மெகாவாட் நெய்வேலி புதிய அனல்மின் நிலையத்தில் அனைத்துப் பணிகளும் நிறைவுபெறும் நிலையில் உள்ளன.
2. நெய்வேலி–உத்தர்பிரதேஷ் மின்நிறுவனம் என்ற நமது நிறுவனத்தின் துணை நிறுவனம் மூலம், உத்திரப்பிரதேச மாநிலத்தின் கதாம்பூர் பகுதியில், கூட்டுமுயற்சியில் நாம் அமைத்துவரும் 3x660 மெகாவாட் நிலக்கரியில் இயங்கும் அனல்மின் நிலையத்தின், கட்டுமானப் பணிகள் தற்போது முழுவீச்சில் நடைபெற்றுவருகின்றன.
3. ஒடிசா மாநிலம், தாலபிரா பகுதியில் வெளி நிறுவனங்கள் மூலம் நிலக்கரி வெட்டியெடுக்கும் வகையில், சுரங்கம் அமைப்பதற்கான நிறுவனத்தினை தேர்வுசெய்து அதற்கான ஆணை வழங்கப்பட்டுள்ளதன்மூலம் அங்கு பணிகள் வேகம் பெற்றுள்ளன. அதுபோன்று, ஜார்க்கண்ட் மாநிலம், தெற்குபச்வாராவிலும் நிலக்கரிச் சுரங்கம் அமைப்பதற்கான பூர்வாங்கப் பணிகள் தற்போது நடைபெற்றுவருகின்றன. தாலபிரா சுரங்கத்திட்டத்திற்கு, சுற்றுச்சூழல் துறையின் அனுமதி வழங்க, அத்துறையின் நிபுணர்கள் குழு (EAC) பரிந்துரைத்துள்ளது. தாலபிரா அனல்மின் திட்டத்தைப் பொறுத்தவரையில், அத்திட்டத்தின் முதல் கட்டமான, 3x800 மெகாவாட் திறன்கொண்ட மின் உற்பத்திப் பிரிவுகளுக்கான கொதிகலன் மற்றும் ஜெனரேட்டர்களை தயாரித்து நிர்மாணிக்கும் பணிகளை மேற்கொள்ளும், விருப்பத்தை தெரிவிக்கும் ஒப்பந்தப்புள்ளிகள் வரவேற்கப்பட்டுள்ளன. மேற்கண்ட இருமாநிலங்களிலும் நாம் அமைக்கவிருக்கும் திட்டங்களில் பணிகள் தொடங்கப்பட்டுள்ளதன் மூலம், நாட்டின் அனைத்துப்பகுதிகளிலும் நமது செயல்பாடுகள் விரிவுபடுத்தப்பட வேண்டும் என்ற நமது நோக்கம் மேலும் வலுவடைந்துள்ளது.
4. நெய்வேலியில் அமைக்கப்படவுள்ள 2x660 மெகாவாட் திறன்கொண்ட இரண்டாம் அனல்மின் நிலையத்தின் இரண்டாம் விரிவாக்கத்திற்கான, ஒப்பந்தப் புள்ளிகளை பரிசீலனை செய்யும் பணிகள் நடைபெற்றுவருகின்றன.

பசுமை மின்சக்தி எனப்படும் சூரியஒளி மற்றும் காற்றாலை மின்சக்தித்துறையில் நாம் குறிப்பிடத்தக்க வளர்ச்சியைப் பெற்றுள்ளோம். நெய்வேலியில் நாம் அமைத்துள்ள 140 மெகாவாட் திறன்கொண்ட சூரியஒளி மின்நிலையம், தமிழகத்தின், திருநெல்வேலி மாவட்டத்தில் அமைத்துள்ள 51 மெகாவாட் காற்றாலை மின்நிலையம் ஆகியவற்றில் ஏற்கனவே உற்பத்தி நடைபெற்றுவரும் நிலையில், தமிழ்நாடு மின்உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகத்திற்கு மின்சக்தி வழங்குவதற்காக, நாம் தமிழகத்தின் தென்மாவட்டங்களில் அமைத்துவரும் 1209 மெகாவாட் சூரியஒளி மின்திட்டங்களில், 300 மெகாவாட் திட்டத்தில் சமீபத்தில் உற்பத்தித் தொடங்கப்பட்டுள்ளது. 14.06.2018 அன்று, நெய்வேலிக்கு வருகைபுரிந்த மாண்புமிகு மத்திய நிலக்கரித்துறை அமைச்சர் திரு. பியூஷ் கோயல் அவர்கள், இத்திட்டத்தை நாட்டிற்கு அர்ப்பணித்தார். எஞ்சிய 909 மெகாவாட் சூரியஒளி மின்திட்டங்களில் பணிகள் நடைபெற்றுவருகின்றன.

இவ்வாண்டு ஜூலை மாதம் 5 மற்றும் 6 ஆகிய தேதிகளில் நெய்வேலியில் நடைபெற்ற நிலக்கரி அமைச்சகத்திற்கான ஆலோசனைக்குழுக் கூட்டத்தில் பங்கேற்க வருகை புரிந்த மாண்புமிகு மத்திய நிலக்கரி மற்றும் சுரங்கத்துறை இணை அமைச்சர் திரு. ஹரிபாய் பார்திபாய் படேல் அவர்களும், மத்திய நிலக்கரி அமைச்சக செயலர் டாக்டர் இந்தர் ஜித் சிங், IAS அவர்களும் நமது செயல்பாடுகளை வெகுவாகப் பாராட்டிச் சென்றுள்ளனர்.

நமது நிறுவனம், கீழ்க்கண்ட மதிப்புமிக்க விருதுகளால், சமீபத்தில் கௌரவப்படுத்தப்பட்டுள்ளது குறித்து உங்களிடம் பகிர்ந்து கொள்வதில் பெரும் மகிழ்ச்சியடைகிறேன்.

1. ஆட்சிமொழியை அமல்படுத்துவதில் சிறப்பாக செயல்படும் நிறுவனத்திற்கான 'ராஜ்பாஷா விருது'
2. ஹெரால்டு குளோபல் மற்றும் விளம்பர ஆய்வு மற்றும் ஆலோசனை நிறுவனம் (BARC) வழங்கிய, தனது விரிவாக்கத்திட்டங்கள் மற்றும் சமூக பொருளாதார மேம்பாட்டு திட்டங்களால் 'கடந்த 10 ஆண்டுகளில் பொதுமக்களிடையே பிரபலமான, நிறுவனத்திற்கான விருது'
3. அபெக்ஸ் இந்தியா அறக்கட்டளை வழங்கிய, 'சிறந்த சமூகப் பொறுப்புணர்வுப் பணிகளை மேற்கொண்டுவரும் நிறுவனத்திற்கான விருது–2017'
4. புகழ்பெற்ற ஹிந்துஸ்தான் டைம்ஸ் நாளிதழ் குழுமம், பிரைஸ் வாட்டர்ஹவுஸ் கூப்பர் என்ற சர்வதேச அமைப்பின் மூலம் ஆய்வு செய்து வழங்கிய, 'இந்திய பொதுத்துறை நிறுவனங்களில், அதிவிரைவான வளர்ச்சியைப் பெற்றுவரும் நிறுவனத்திற்கான விருது'
5, சர்வதேச அளவில் பிரபலமான டன் அண்ட் பிராட்ஸ்ரீட் என்ற அமைப்பு வழங்கிய, '2018ம் ஆண்டில், மின்உற்பத்தித்துறையில் சிறப்பான வளர்ச்சி பெற்ற பொதுத்துறை நிறுவனத்திற்கான விருது'

நமது நிறுவனம், ஒரு சமூகப் பொறுப்புணர்வு மிக்க நிறுவனமாகத் தொடர்ந்து செயல்பட்டு வருவதுடன், சமுதாய மேம்பாட்டுப் பணிகளை நிறைவேற்ற, மிகுந்த முக்கியத்துவம் வழங்கி வருவதை உங்களிடம் தெரிவிப்பதில் மகிழ்ச்சியடைகிறேன். அந்த வகையில், அனைவரையும் உள்ளடக்கிய நீடித்த வளர்ச்சியை உருவாக்க வேண்டும் என்ற நோக்கத்தில், சுகாதார மேம்பாடு, கல்வி, திறன் மேம்பாடு, மகளிரை அதிகாரமயப் படுத்துதல், சமூகக் கட்டமைப்புகளை மேம்படுத்துதல், மருத்துவ வசதி, குடிநீர் வசதி, விவசாயத்திற்கான நீர்பாசன வசதி, கழிவறை வசதி போன்ற நலப் பணிகளை, நமது செயல்பாடுகள் நடைபெற்று வரும் நெய்வேலி, தூத்துக்குடி, பார்சிங்சர், கதாம்பூர் மற்றும் தாலபிரா பகுதிகளில் மேற்கொண்டு வருகிறோம். கடந்த 2017–18ம் நிதியாண்டில் மட்டும், இதுபோன்ற பல்வேறு சமூக மேம்பாட்டுப் பணிகளை மேற்கொள்வதற்காக, நமது நிறுவனம் ரூ.43.59 கோடியை செலவிட்டுள்ளது. இப்பணிகளில், அனைவரின் இதயங்களிலும் இடம்பிடித்த பணியாக 'ஆனந்த இல்லம்' என்ற முதியோர் இல்லம் திகழ்ந்துவருகிறது. நமது ஊழியர்களின் பங்களிப்புடன் நடத்தப்பட்டுவரும் இந்த இல்லத்தில் ஆதரவற்ற முதியோர் சுயமரியாதையுடன், ஆனந்தமாக வாழ்ந்து வருகின்றனர். பொதுமக்கள் பயன்பெறும் வகையில் 'சாந்திவனம்' என்ற எரிவாயுவில் இயங்கும், சுற்றுச்சூழலுக்கு உகந்த நவீன தகனக்கூடம், நெய்வேலி நகரியத்தில் அமைக்கப்பட்டுள்ளது.

நமது மாணவச் செல்வங்கள் கடந்த ஆண்டுகளைப் போன்று, இவ்வாண்டிலும் கல்வியிலும், இதர துறைகளிலும் பல்வேறு வெற்றிகளைக் குவித்துவருகின்றனர். தங்களது செயல்பாடுகள் மூலம், நெய்வேலிக்கு பெருமைசேர்க்கும் மாணவமணிகளுக்கு இந்த இனிய விழாவில் எனது பாராட்டுகளை உரித்தாக்குகிறேன்.

- ➢ புனித ஜோசப் குளூனி மெட்ரிக். மேல்நிலைப்பள்ளி மாணவி, செல்வி L. ஜோத்ஸ்னா, புதுடில்லியில் நடைபெற்ற 14 வயதிற்குட்பட்டோருக்கான காமன்வெல்த் சதுரங்கப் போட்டியில் இந்தியாவின் சார்பில் பங்கேற்று தங்கப் பதக்கம் வென்றுள்ளார்.
- ➢ நெய்வேலி கேந்திரிய வித்யாலயா மாணவிகள் செல்வி M.B. நேகா (U-17) மற்றும் செல்வி K.M. ஸ்ரீஜா (U-14), புவனேஸ்வரத்தில் நடைபெற்ற, கேந்திரிய வித்யாலயா பள்ளிகளுக்கான தேசிய சதுரங்கப்போட்டியில் முறையே தங்கம் மற்றும் வெள்ளிப்பதக்கங்களை வென்றுள்ளனர்.